1248

REGISTERED No. M. 6165.                அணா. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

1248
3.00

மாத பத்திரிகை

செப்டம்பர் 1955.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 SEP 1956
MADRAS.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| நாத்திகனை நல்லவனாக்கும் ஞானம் எது | 1 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) ... ... ... | 7 |
| இஸ்லாமும், நவீன விஞ்ஞானமும் (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி) ... ... | 15 |
| திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... | 19 |
| "ஏ இஸ்லாமியனே!" (பி. எ. ஸுன்னு) ... | 25 |
| ...ஸ்டன் சர்ச்சில்" (முஹம்மது தாவூது) | 27 |

...ல் இஸ்லாம் ஆபீஸ் :
...ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

JL
[illegible], N24FI
X155
187046

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## இஸ்வத்து நாச்சியுடைய கிஸ்ஸா.

இது ஷாம் தேசத்தி லிருந்த லாபி றென்னும் ஆலிமுடைய மகள் இஸ்வத்து நாச்சியாரின் சரிதையாகும். இதில் இஸ்வத்து நாச்சியாருக்கும் ஹபீபென்னும் ஒரு பணக்கார வியாபாரிக்கும் நடந்த நிக்காஹும், ஹபீபென்பர் வெளியூர் சென்றிருக்கும்போது அவருடைய தம்பி இஸ்வத்து நாச்சியாரை கெடுக்க முயற்சித்ததும், இஸ்வத்து நாச்சியார் தன் கற்பை காப்பாற்றுவதில் பட்ட கஷ்டங்களும், பின் தான் ஆண் உருவ மேற்க்கொண்டு செய்த நற்செயல்களும், கடைசியில் தனது கணவரைச் சேர்ந்ததும் மிகவும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இதை ஒவ்வொரு முஸ்லிமும், பெண்கள் குறிப்பாகவும் படித்தறியவேண்டியது அவசியம்.

இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الإسلام

# 'பத்ஹுல் இஸ்லாம்'

செப்டம்பர்—1955.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 SEP 1955
MADRAS

## நாத்திகனை நல்வழிக்குத் ஞானம் எது?

ஆண்டவன் உண்டா? இல்லையா? இறைவன் என்ற ஒரு பரம் பொருள் வேண்டுமா? வேண்டாமா? என்பதில், பண்டைக்காலத்து விஞ்ஞானிகளும் இக்காலத்து ஸைன்ஸ்வாதிகளும் அதி தீவிரமாய் ஆராய்ச்சி செய்து கொண்டுதானிருந்தனர்; இப்போதும் செய்து கொண்டுதா னிருக்கின்றனர். ஆயினும் அவர்களின் ஆராய்ச்சிகளும் விவாதங்களும் இன்னும் முடிவடைந்த பாடில்லை.

ஆனால் இன்றைக்கு 1375 ஆண்டுகளுக்கு முன் முறைப்படி விஞ்ஞானக் கல்வி கற்றுக்கொள்ளாத பாலைவனப் பெருந்தகையார், ஒருவர், 'ஆண்டவன் உண்டா? இல்லையா?' என்ற சர்ச்சையில் இறங்காமல், ஒரே அடியாக, 'ஆண்டவன் ஒருவன் உண்டு; அவனையே எல்லோரும் ஏற்று வணங்குதல் வேண்டும்' என்ற மெஞ்ஞானத்தை தெள்ளத் தெளிய எடுத்துரைத்து, அதை மாந்தர் கோடியின் உள்ளங்களிலே உறுதிபெற நிலைத்திருக்குமாறு செய்து விட்டார்.

இறைவன் உண்டு என்று ஒத்துக்கொள்வதற்கு விஞ்ஞானம் வேண்டியதில்லை; பூதபௌதிக சாஸ்திர ஆராய்ச்சி வேண்டியதில்லை. மனிதன் முன்னால் உண்டானானா? குரங்கு முதலில் உண்டாயிற்றா?

என்ற டார்வின் வாதமும் வேண்டியதில்லை. ஆனால், 'இறைவன் இல்லை' என்பதை வலியுறுத்தப் பிரயத்தனப்படும் பேர்வழிகள்தான் 'இயற்கை' என்ற போர்வையால் முகத்தை மூடிக்கொண்டு 'ஆண்டவனே இல்லை; அப்படி ஒன்று தேவையே இல்லை' என்று கரடியாகக் கத்துகின்றனர்.

இப்படி 'இல்லை' என்ற சொல்லை உண்டு என்று ஸ்தாபிக்கப் பிரயத்தனப் படுகிறார்களே அவர்களுக்கு 'நாத்திகர்—நாஸ்திகர்' என்று உலக மக்கள் நாமம் சூட்டுகின்றனர். 'நாஸ்தி' என்பது இல்லையென்னும் வார்த்தையைக் குறிப்பதாகும். இது சமஸ்கிருதம் என்ற வடமொழியாகும். இந்த நாத்திக வாதம் ஆரம்பத்தில் சமஸ்கிருதம் படித்த ஆரியரில் ஒருசாராரிடம்தான் முதன் முதன் தோன்றியது என்று ஒருசாரார் கூறுகின்றனர். இன்னொரு சாரார், இந்த 'இல்லை என்ற வாதம்' லோக ஆசாபாசங்களில் அதிகம் மூழ்கிப்போய் விடும் மேனாட்டார்களிட மிருந்துதான் தோன்றியது என்று தைரியமாய் கூறுகின்றனர். எப்படியாயினும் இறைவன் உண்டு என்று நம்பி பயபக்தியுடன் ஒழுகுபவர்கள்தான், உலகத்தில் எப்போதும் எக்காலத்திலும் அபரிமிதமாக இருந்து வந்துள்ளனர். ஆண்டவன் இல்லை யென்று சொல்வோர் அற்பசொற்பமாகவே இருந்துவந்துள்ளனர்.

ஆண்டவன் உண்டு என்று நம்பி யொழுகுபவர்கள், உலக வாழ்வில் திருப்தியுடன் வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்கள் மன சஞ்சலமோ, புறக்கஷ்டமோ நேரிடும் போதெல்லாம், பாரத்தை இறைவன்மீது போட்டுவிட்டு விதி என்று ஆத்மவிசாரத்தை தம் சாந்திக்கோர் சாதனமாய்க் கொண்டு ஜீவியம் புரிகின்றனர். இன்னோர்க்கு வாழ்நாட்களிலும் திருப்தி ஏற்படுகின்றது; மரணகாலத்திலும் ஆத்மசாந்தி ஏற்படுகிறது.

ஆண்டவன் இல்லை என்று வாதாடும் நாத்திகப்பேர்வழிகளின் வாழ்க்கை மிகமிக சிக்கலாகவும், அமைதியற்றதாகவுமே இருந்து வந்துள்ளது. நாஸ்திகனுக்கு மற்ற ஜனங்களிடம் நல்ல வரவேற்பு இருக்க மாட்டாது; நாத்திகனைக் கண்டால், பெரும்பாலோர், 'இவனுடன் நாம் ஏன் [illegible] தேகத்தை வீணாக்க வேண்டும்' என்று எண்ணி ஒதுங்கி [illegible] நாத்திகன் பிறஜனங்களுடன் சகஜமாக பழகவும் முடியாது. தன[illegible]ய இல்லை என்ற வாதத்

187046

துக்கு காரண காரியங்களை கண்டு பிடிப்பதிலேயே அவன் நேரத்தை கழித்துக் கொண்டிருப்பான். வேறு சில ஆஸ்திக ஜனங்கள், நாஸ்திகனைக் கண்டால், 'இவனுடைய மூளையைக் கொஞ்சம் குழப்பி வைப்போம்' என்று அவனை வலிய அழைத்து விவாதம் செய்வார்கள். அந்த நாஸ்திகன், தன்னை இவர்கள் மரியாதை செய்து, தான் சொல்வதை உவப்புடன் கேட்கின்றனர் என்று கருதிக் கொண்டு, தன் வாக்கு சாதுரியத்தையும் பேச்சு சாமர்த்தியத்தையும் கொண்டு நெடுநேரம் பேசி, தன் தொண்டைத்தண்ணீரை காயவைத்துக் கொள்வான். இவன் கண்ட பலன் என்ன? வெகு நேரம் பேசி, தன் நேரத்தையும் பிறர் நேரத்தையும் வீண் அடித்த தல்லாமல் கைகண்ட பலன் ஒன்று மில்லை.

பொதுப்படையாக நாஸ்திகன் ஆஸ்திகனாகிவிடலாம்; ஆனால் ஆஸ்திகன் ஒருபோதும் நாஸ்திகனாகவே மாட்டான். சிலசமயம் அளவுக்கு மீறிய சஞ்சலங்களும் துன்பங்களும் நேரிடும்போது, ஆஸ்திகன் தன்னுடைய கடவுளை நிந்தித்துப் பேசலாம்; இறைவனிடம் குறைகளை சொல்லிக்கொள்ளலாம். "பாழுந்தெய்வமே! என்னை ஏன் இப்படி கஷ்டத்தில் போட்டு விட்டாய்?" என்று பிரலாபிக்கலாம். இதெல்லாம் ஆண்டவன் இல்லை என்பதற்கு அத்தாக்ஷிகளாய் விடமாட்டாது.

ஒரு தந்தைக்குப் பலபிள்ளைகள் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்பிள்ளைகளெல்லாரும் ஒரே சுபாவமுடையவர்களாய் இருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது. ஒரு பிள்ளை புத்திசாலியாகவும் அத்தியந்த விவேகியாகவும் இருப்பான். இந்தப் பிள்ளையால் தகப்பனாரின் காரியங்களில் சகாயமும் உதவியும் ஏற்படலாம். இதற்காக அந்த தந்தை புத்திசாலி பிள்ளையை தட்டிக் கொடுத்து அவனுக்குவேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து ஆதரிப்பார். அந்த தந்தைக்கே பிறந்த மற்றொரு குமாரன், முன்னவனுக்கு நேர் மாறாக, விவேகமில்லாதவனாகவும் போக்கிரியாகவும் முரட்டு சுபாவியாகவு மிருக்கலாம். இப்படிப்பட்ட பையனால் தந்தைக்கு மனக்கஷ்டமும் பணச்செலவும்கூட அதிகம் ஏற்படலாம். தொந்தரவுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கும் இந்த மகனுக்கு, தந்தை வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்காமல் உதாசீனம் செய்யலாம்; கஷ்டத்தில் போட்டுவைக்கலாம். இதற்காக இந்தப் பையன் குறை

கூறத்தானே செய்வான். இவன் சிலசமயம் தகப்பனுரையும் எதிர்ப்பான்; வாய்க்குவந்தவாறு பேசுவான். 'தான் அந்தத்தகப்பனுக்கே பிறந்தவனல்ல' வென்றும், 'தனக்கு யாரும் தகப்பனே கிடையாது' என்றும் சினங்கொண்டு பேசுவான். இவன் இப்படி பேசித்திரிவதனுல் இவனுக்குரிய தந்தை இல்லாமல் போய்விடுவாரா? இவன் அவருடைய சிருஷ்டியாக (பெற்றபிள்ளையாக) இல்லாது போய்விடுவாணு?

இதே உதாரணம் ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் கூட பொருந்தும். ஆஸ்திகன், இறைவன் உண்டென்று நம்பி, இறைவன் இட்ட கட்டளைகளை நிறைவேற்றி, பக்தி வணக்கம் புரிந்து, நல்லொழுக்கத்தில் சிறந்து, தானும் திருப்தியாக இருந்துகொண்டு பிறருக்கும் திருப்தியை தந்து கொண்டிருப்பான். இவனுல் யாருக்கும் தீங்கில்லை. யாரும் இவனுக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள்.

ஆனுல், 'இறைவன் இல்லை' என்று வாதாடித் திரியும் நாஸ்திகனே, தன் நாஸ்திக வாதத்தை வலியுறுத்துவதற்காக, எதையெதையோ பேசவேண்டியிருக்கிறது. வானம் எப்படி உண்டாயிற்று? பூமி எப்படி பரந்துப் பரவி இருக்கிறது? சமுத்திரம் எப்படி விசாலமான ஜலப்பிரளயம் பெற்றிருக்கிறது? சூரியன் ஏன் உஷ்ணமான கிரணங்களை வீசிப் பிரகாசிக்கிறது? சந்திரன் ஏன் தண்ணென்ற குளிர்ந்த ஒளியை வீசி மனமகிழ்ச்சி உண்டாக்குகிறது? இந்த கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் என்ற அந்த விண் மீனங்கள் ஏன் விட்டு விட்டுப் பிரகாசித்துக் கண் சிமிட்டுகின்றன? காற்று எங்கிருந்து வீசிக் கொண்டு வருகிறது? மழை எப்படி வருகிறது? இடியோசை எங்கிருந்து கேட்கிறது? மின்னெளி எங்ஙனம் பளிச்சிட்டு மறைகிறது—என்று பலப்பல கேள்விகள் கேட்கும் ஆஸ்திக மாந்தர்களின் விசாரணைக்கெல்லாம், அந்த அவிவேக நாஸ்திகன் மனம் போனபடியெல்லாம் ஏதேதோ காரிய காரணம் கூறி பதில் சொல்லவேண்டியிருக்கிறது.

'சமுத்திரம் தானே உண்டாய்விட்டது, மண் கட்டியாகிய பூமி அதிலிருந்து ஒதுங்கி மலையாகி, மண்ணுங் கட்டியாகி பூப்பரப்பாய் விரிந்தது என்று நாஸ்திகன் சொல்லுகிறுன். இவ்வாறே சூரியன், சந்திரன், நட்சத்திரம், இடி மின்னல் எல்லாம் தானே உண்டாய்

விட்டது என்று விதண்டாவாதம் பேசுகிறான். ‘நீ எப்படியப்பா உண்டானாய்?’ என்று கேட்டால், ‘இயற்கை நியதிப்படியே நானும் உண்டாய் விட்டேன்’ என்று கூறுகிறான். அவனுடைய தாயும் தந்தையும் சுய உணர்வோடு கலந்து இன்பம் அனுபவித்ததால், அவனது தாயார் சூல்கொண்டு, பத்து மாதம் அதை பாதுகாத்து பத்திரமாகப் பெற்றெடுத்து வளர்த்துப் பெரியவனாக்கி, படிக்கவைத்து அறிவூட்டியதால் தானே நாம், இங்ஙனம் பேசுகின்றோம் என்பதையும் அவன் மறுதளித்துப் பேசுகிறான். தாயும் தந்தையும் கூடிப் பெற்று வளர்த்ததையும் அவன் ‘இயற்கை’ என்கின்றான். மன மொத்த இருவர் கலியாணம் செய்து கூடிப் பழகுவது இயற்கையா? பிள்ளையை தொட்டிலிலிட்டு பாலூட்டி போஷித்து வளர்ப்பதும் இயற்கையா?

அந்த ஆஸ்திக சத்துருவான நாஸ்திகன் கூறும் இயற்கையிலும் செய்கைதான் மறைந்திருக்கிறது. கடியாரம் இயங்கி மணி காட்டுவதை இயற்கை—சுபாவம் என்று ஒருவன் சொல்லலாம். ஆனால் கடியாரம் எப்படி உற்பத்தியாயிற்று என்ற கேள்விக்கு, அது தானே உற்பத்தியாய் விட்டது என்று பதில் சொன்னால், யாரேனும் ஒத்துக் கொள்ள முடியுமா? நிச்சயமாய், கடிகாரத்தை எவனோ உற்பத்தி செய்தான் என்பது திண்ணம். கடிகாரம் செய்தவன் நேரில் இல்லாதிருக்கலாம்; மறைந்திருக்கலாம். அதற்காக கடிகாரம் இயற்கையாய் உண்டாய் விட்டதென்று சொல்லி விடுதல் சரியாகுமா? கடிகாரத்தைக் கொண்டே, கடிகாரத்தை உற்பத்தி செய்து வைத்தவன் ஒருவன் கட்டாயம் உண்டு என்பதை நாம் அறிந்துகொள்கிறோம்.

வானம் பூமி என்ற பேழைக்குள் சூரியன் சந்திரன் நட்சத்திரம் இடி மின்னல் எனப்படும் மணிமுள், நிமிஷமுள், சக்கரம், இயங்கி, சுழற்சி எனப்படும் சாமான்களெல்லாம் சேர்ந்து பெரியதோர் மகா கடிகாரமாகும். அதை முறைப்படி, ஒழுங்குப் பிரகாரம் செய்து வைத்தவன் நம் இரக்ஷகனும் இறைவனும் சிருஷ்டிகர்த்தனும் அருளாளனும் அன்புடையோனுமான எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவேயாவன். அவன் பிரத்தியக்ஷமாய் ஓர் உருக்கொண்டு கண்முன் காட்சியளிக்காததால் ‘அவன் இல்லை’ என்று சொல்லி விடப்போமோ?

'எல்லாம் வல்ல இறைவன் உண்டு' என்று நம்பி உறுதி கூறுவதற்குக் காரண காரிய விதண்டாவாதம் வேண்டியதில்லை. வானம், பூமி, மலை, கடல், திடல் இவைகளைப் பார்த்தே, இவைகளையும் நம்மையும் சிருஷ்டித்த இறைவன் மகா சக்தியுடையோன் அவன் எங்கும் உண்டு; அவன் சக்தி எங்கும் உளது என்று சொல்லிவிடலாம். இதற்கு பள்ளிப்படிப்பு வேண்டாம்; காலேஜ் கல்வி வேண்டாம்; மேனாட்டு கலாஞானம் வேண்டாம்; டார்வின் நியதி வேண்டாம்; தர்க்க சாஸ்திரம் வேண்டாம்.

ஆண்டவன் உண்டு என்று கூறி இஸ்லாத்தை ஸ்தாபித்து வைத்த வள்ளல் எம்பெருமானார் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய அரபு நாட்டிலே வதியும் காட்டரபி என்னும் படிப்பில்லாத பத்வி (கறுப்புநிற பட்டிக்காட்டு மாந்தன்) கூட, 'ஆண்டவன் உண்டு' என்ற ஞானத்தை எவ்வளவு எளிதில் புரிந்து கொண்டு உண்மை கூறுகிறான் என்பதற்கு ஒரு உதாரணம் கூறிவிட்டு இக்கருத்துரையை முடிக்கிறேன் :—

'ஒரு பாமரனாகிய காட்டு அரபியிடம், மெத்தப்படித்த நாஸ்திகன் போன்ற விவேகியொருவன் அணுகி "ஆண்டவன் உண்டு என்பதற்கு உன்னிடம் என்ன ஆதார மிருக்கிறது; உதாரணத்துடன் கூறு, பார்ப்போம்" என்று கேட்டான். அதற்கு அந்த காட்டரபி கூறியதாவது:—"எங்கணும் மணற்காடாகிய இந்தப் பாலை வனத்திலே, நான் ஓரிடம் ஒட்டகத்தின் புழுக்கை கிடக்கக் கண்டால், 'ஆம்! நிச்சயமாய் இந்த வழியாக ஒரு ஒட்டகம் வந்து போயிருக்கிறது' என்பதை எங்ஙனம் உணர்ந்து கொள்கிறேனோ அதே மாதிரி தான், இந்த வானம், பூமி, மலைகளையெல்லாம் படைத்த ஓர் ஆண்டவன் உண்டு என்பதை உணர்ந்து கொள்கிறேன். இதைவிடவேறென்ன அத்தாக்ஷி வேண்டும். ஆண்டவன் உண்டென்பதற்கு! அல்ஹம்து லில்லாஹ்!"

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 17—வது பகுதி)

### 33-வது அத்தியாயம்.

ரெயில் பிரயாணத்தில், தன்னுடன் சந்தோஷமாக பல விஷயங்களைப் பற்றி இன்ஸ்பெக்டர் சம்பாஷித்துக் கொண்டே வருவார் என்று டாம் எதிர்ப்பார்க்க, ட்ரெயினில் ஏறியதும் பென்டன் தான் கொண்டு வந்த பத்திரிகைகளின் கட்டை அவிழ்த்து அதிலிருந்து ஒவ்வொரு பத்திரிகையாக எடுத்து அதை படிக்க ஆரம்பித்தார். எவ்விஷயத்தை மிக ஆவலுடன் படிக்கிறாரென்று டாம் பக்கத்தில் உட்கார்ந்து கவனிக்க, இன்ஸ்பெக்டர் பென்டனின் திறக்குறைச் சலை பற்றி விபரித்து, அவரை இழிவாக ஏசி எழுதியவைகளையே படித்துக் கொண்டிருந்தார்.

தான் படிப்பதை மிக ஆச்சரித்துடன் டாம் கூர்ந்து கவனிப்பதை பார்த்த இன்ஸ்பெக்டர் தான் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையை கீழே வைத்து விட்டு, டாமைப் பார்த்து, "ஒருவனின் குறை குற்றங்களைப் பற்றி கூறுவதால், அவனுக்கு யாதும் தீங்கோ கஷ்டமோ ஏற்படாது, ஆனால் ஒருவன் தான் செய்து வருவது தவறு என்றறிந்திருக்கும்போது, அதை இன்னொருவன் கூறுவானாயின், அப்பொழுதான் அவனுக்கு கோபம் வரும். எனக்குத் தெரிந்தவரை, நான் சரியான வழியில் இக்கேஸை கவனித்து வருகிறேன். அதனால் எவ்வளவு குற்றங்களை என் பேரில் சுமத்தினாலும், நான் பொருட்படுத்த மாட்டேன்" என்றார்.

"இதுவரை ஒழுங்காக சரியான வழியில் கவனித்து வருகிறீர்களென்றே நினைக்கிறீர்களோ! எந்த வகையில் சரியென்று விபரிக்க முடியுமோ" என்று டாம் ஆச்சரியத்துடன் கேட்டான். அதற்கு இன்ஸ்பெக்டர் விபர்த்து சொல்ல தயாராயில்லை.

இவர்கள் ஒரு சிறிய ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கியதும், அங்கிருந்து சுமார் 3 மைல் தூரத்திலிருந்த டாமின் வீட்டிற்குச் சென்றனர். அங்கு வேலைக்காரன் எஜமானருக்காக சாப்பாடு வகைகளை ஒழுங்கு செய்து வைத்து தயாராக கார்த்துக் கொண்டிருந்தான். இவர்கள் வந்ததும், ஒரு தந்தியை இன்ஸ்பெக்டர் வசம் கொடுத்தான். இன்ஸ்பெக்டர் அதை வாங்கி உடைக்காமல்

திருப்பி திருப்பி பார்த்தபின் "இது எப்பொழுது வந்தது?" என்று கேட்டார். "சுமார் 5 நிமிடத்திற்கு முன்" என்று வேலைக்காரன் சொன்னான்.

இன்ஸ்பெக்டர் அந்த தந்தியின் கூடை கிழித்து பார்க்க, "உடனே லண்டனுக்கு திரும்பு, முக்கியமான விஷயம்—ஸிம்ஸன்" என்று எழுதியிருந்தது. அதை டாம் வசம் ஒன்றும் சொல்லாமல் கொடுத்தார். அதைப் படித்த டாம், இன்ஸ்பெக்டர் தன்னுடன் துணையாக யிருப்பாரென்று நினைத்ததற்கு மாறாக இவ்வாறு தந்தி வந்து விட்டதே என்று கவலையுடன் "நீங்களும் கட்டாயம் போக வேண்டிய தேற்பட்டு விட்டது. திரும்பிபோக ட்ரெயினும் தற்போது கிடையாது. காலை 9 மணிக்கு முதல் ட்ரெயின்" என்றான்.

"நான் போக வில்லை. இப்பொழுதுதான் வந்தேன். இனி ஒரு முறை பிரயாணம் செய்ய என்னால் முடியாது. தந்தி வந்தால் என்ன? பின் பார்க்கலாம்" என்று கவலையின்றி இன்ஸ்பெக்டர் சொன்னார்.

இதைப்போல் இன்ஸ்பெக்டர் பதில் சொல்வாரென்று டாம் நினைக்கவே இல்லை. ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர், தனது வேலையில் கொஞ்சமும் சிரத்தை காட்டாமல், தனது சொந்த சௌகரியத்தை கவனிப்பது டாமுக்கு பிடிக்க வில்லை. இருந்த போதிலும் தற்போது டாம் தான் தனியாக இவ்வீட்டிலிருப்பது மனதிற்கு பயமாயிருந்ததால், இப்பொழுது துணைக்கு இன்ஸ்பெக்டர் தன்னுடன் தங்குவதைப் பற்றி ஒரு புறம் டாமுக்கு சந்தோஷம்.

இன்ஸ்பெக்டர் தந்தியை இன்னொரு முறை பார்த்து, "நாம் புறப்பட்டு, ½ மணி நேரத்திற்குள் இந்த தந்தி அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இங்கு டெலிபோன் இருக்கிறதா?" என்று கேட்டார். டாம், இருக்கிறதென்று சொல்லவே, இன்ஸ்பெக்டர் டெலிபோனினருகே போய், பட்டணத்திலுள்ள ஸிம்ஸனுடன் பேசினார். பிறகு டாமிடம் வந்து "நான் நினைத்தபடி ஆயிற்று. இது பொய் தந்தி. நான் தற்போது ஸிம்ஸனுடன் டெலிபோனில் பேசினேன்" என்றார்.

"இந்த தந்தியைப் பார்த்ததும் உங்களுக்கு சந்தேக மேற்பட்டதா?"

"ஆம்"

இருவரும் அன்றிரவு அநேக விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டே அதிக நேரமாகி விட்டது. டாம் திடீரென்று மணியைப் பார்க்க, 12 ஆகிவிடவே படுக்கச் சென்றனர். டாமின்

தகப்பனுர் பெர்ரி உபயோகித்து வந்த அறை இன்ஸ்பெக்டருக்கு கொடுக்கப்பட்டது,

"நீ எங்கு படுக்கப்போகிருய்?" என்று டாமை கேட்டார். "அடுத்த அறையில்" என்று சொல்லி, இருவரும் தத்தம் அறைக் குச் சென்றனர். டாமின் அறையின் கதவு மூடப்பட்ட சப்தம் கேட்ட பின், இன்ஸ்பெக்டர் தனது மேல் கோட்டை மாத்திரம் கழட்டி விட்டு, குளிருக்காக தான் கொண்டு வந்த ஒரு பெரிய கோட்டை அணிந்து, ஜன்னலினருகே, அதன் கதவுகளைத் திறந்து விட்டு, படுக்கைக்குப் போனுர். ஜன்னலைப் பார்த்தவாறு படுத்தார்.

அதிகாலையில் இன்ஸ்பெக்டர் திடீரென்று எழுந்தார். மெது வாக சப்தமில்லாமல் ஜன்னலினருகே வந்து வெளியே பார்த்தார். ஏதோ காரின் சப்தம் சிறிது கேட்டது. பிறகு சப்தம் நின்றது. ஆனுல் ஒன்றும் தெரியவில்லை. திரும்பி அறையில் தண்ணீர் வைத் திருக்கும் இடத்திற்கு வந்து முகத்தை கழுவியபின், ஒரு நாற்காலி யை ஜன்னலினருகே போட்டு அதில் உட்கார்ந்து வெளியே பார்த்த வண்ணமிருந்தார். சுமார் ½ மணி நேரத்திற்குபின் ஒரு மனித உருவம் சிறிது தூரத்தில் தெரிந்தது. ஆனுல் அவ்வுருவம் ஒவ் வொரு மரத்தின் பின்னுல் ஒளித்து ஒளித்து வருவது தெரிந்தது. சிறிது நேரத்திற்குள் அவ்வுருவத்தை பார்க்க முடியவில்லை. உடனே இன்ஸ்பெக்டர் எழுந்து அறையிலிருந்து வெளிவந்து கீழிறங்கி தெரு கதவை திறந்து வெளிவந்தார். வெளியே யாரையும் காணும். அங்கு மிங்கும் உலாவுவதைப் போல் பார்த்தார். அச்சமயத்தில் தூரத்தில் ஒரு கார் புறப்பட்டு போகும் சப்தம் கேட்டது. வந்தவன் போய் விட்டான்.

அவர் திரும்பி வந்து கதவை முன்போல் மூடிவிட்டு, தனது அறைக்கு வந்து உட்கார்ந்தார். வந்தவன் யர்ராயிருக்கக்கூடுமென்று எண்ணினுர். யாராயிருந்தாலும் தன்னை பார்த்திருக்க மாட்டான் என்பது திண்ணம். ஏதோ காரியத்திற்கு வந்து அவ்வேலையை முடித்து விட்டு போய்விட்டான் என்று எண்ணினுர். இன்ஸ் பெக்டர் காலையில் சாப்பிட கீழிறங்கும் போதுதான், வந்த மனித னின் விபரம் தெரியலாயிற்று.

சாப்பிடும் அறையில் டாம் கையில் ஒரு காகிதத்தை வைத்து படித்துக் கொண்டிருந்தான். அந்த காகிதம் எங்கோ ஒட்டப்பட்டு பின் கிழிக்கப்பட்டதைப் போல் நழுங்கி யிருந்தது. அதை தூரத் திலிருந்து பார்த்ததும், அது இரத்தச் சின்ன சங்கத்தின் கடித மென்பதை இன்ஸ்பெக்டர் அறிந்தார்.

இன்ஸ்பெக்டர் வந்ததைப்பார்த்த டாம் திரும்பி அந்த காகிதத்தை கொடுத்து "இதைப் போல் 5, 6 ஒவ்வொரு மரத்திலும் ஒட்டப்பட்டிருந்தது. ஒன்று எனது அறையின் ஜன்னல் கதவில் ஒட்டப்பட்டிருந்தது" என்றான்.

அதில் "உனது தகப்பனரிடம் கேட்டதொகை இதுவரை கொடுக்கப்படவில்லை. அது தீர, ஸிம்ஸனையும் பென்டனையும், அவர்கள் தற்போது எங்களை கண்டுபிடிக்க செய்யும் முயற்சியை செய்யாமலிருக்குமாறு தூண்டினல் போதும்" என்று எழுதப்பட்டிருந்தது. அதன் கீழ் சிறு எழுத்தில் "இனி தனி நபரிடமிருந்து பணம் கேட்பதை நிற்பாட்டி விட்டோம்" என்றும் எழுதியிருந்தது.

"ஓஹோ! இவைகளை ஒட்ட வந்தானே!" என்று யோசித்தவாறு மெதுவாக இன்ஸ்பெக்டர் சொன்னர்.

"நீங்கள் அவனை பார்த்தீர்களா?" என்று ஆச்சரியத்துடன் டாம் கேட்டான்.

"இருட்டில் அவன் உருவம் தூரத்திலிருந்து தெரிந்தது. இதைபோல் ஏதாவது நடைபெறு மென்றும் எதிர்ப்பார்த்தேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

காலை போஜனம் சாப்பிடும் போது இன்ஸ்பெக்டர் ஏதோ யோசித்துக் கொண்டே யாதும் பேசாமலிருந்தார். டாம் கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரம் சுறுக்கில் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

சாப்பிட்டபின் இருவரும் வெளியே மைதானத்தில் நடந்து உலாவும்போது, இன்ஸ்பெக்டர் "அவனுக்கு நீ குலோரியாவின் பேரில் பிரியம் கொண்டிருப்பது தெரியுமோ வென்று யோசிக்கிறேன்" என்றார்.

உடனே டாமின் முகம் நாணத்தால் மாறியது. "என் கேட்கிறீர்கள். அவர்கள் கோபத்தை அவள் பக்கம் திருப்பக் கூடுமென்று நினைக்கிறீர்களோ?" என்று டாம் கேட்டான்.

"அவர்கள் எதுவும் செய்யக்கூடும். இவள் தொலைய வேண்டுமென்று நினைத்தால் மறு வினடியில் தொலைத்து விடுவார்கள்" என்று இன்ஸ்பெக்டர் சொல்லும்போது, தாங்கள் நடந்து வந்துள்ள இடத்தைப் பார்த்து "நடந்தது போதும்" என்றார்.

"ஹட்டன் ஸ்டேஷனிலிருந்து எந்த வழியாக வந்தான் என்று பூரா வழியும் பார்க்க தாங்கள் நடக்கிறீர்கள் என்று நினைத்தேன்" என்று டாம் கேட்டான்.

“ இல்லை உங்கள் வீட்டிற்கு ஹட்டன் எந்த வழியாக வந்தான்? எந்த இடத்திலிருக்கும் போது பயந்தான் என்பதைக்காட்ட முடியுமோ ” என்ருர்.

அதை எதற்கு கேட்கிருரென்று நினைத்து டாம், “ ஓ! ஹட்டன் பயப்படும் போது நின்ற சரியான இடத்தை காட்ட முடியும். ஏனெனில் அவன் பயந்து ஒரு அடி பின் வரும்போது, ஒரு ரோஜா செடியை காலால் நசுக்கியது ஞாபக மிருக்கிறது. வாருங்கள் காட்டுகிறேன் ” என்று சொல்லி அழைத்து போய் “ அதோ பாருங்கள், ஒரு செடி முன் ரோஜா செடி நசுங்கிபட்டுப் போய் விடவே, வேறு செடியை தோட்டக்காரன் நட்டி யிருக்கிருன் ” என்ருன்.

“ இது மிகவும் முக்கியமானது ” என்று சொல்லி அந்த இடத்தில் நின்று கொண்டு “ ஹட்டன் பொய் சொன்ஞனென்று எனக்கு தெரியும் ” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார்.

“ இங்கிருந்து உங்கள் வீட்டு மெத்தை வராண்டாவை பார்க்க முடியவில்லை. இங்கிருந்து, உன் தகப்பனர் மெத்தையில் நிற்பதை பார்த்ததாக ஹட்டன் சொன்ஞன். நான் முதலில், அவன் உன் தகப்பனரைப் பார்த்து பயந்திருப்பா னென்று நினைத்தேன்.” என்ருர்.

அத்துடன் ஹட்டன் சொன்னதை யெல்லாம் டாமுக்கு சொன்ஞர்.

“ எனக்கு அவன் அவ்வாறு சொன்னது தெரிந்திருந்தால், அப்பொழுதே நான் மறுத்து சொல்லி யிருப்பேன். எனது தகப்பனர் அன்று காலையில் வீட்டினுள்ளேயே யிருந்தார். மெத்தைக்கு வர வில்லை” என்ருன்.

இன்ஸ்பெக்டர் தனது ஜேபியிலிருந்து ஒரு சிறிய நோட்புக்கை எடுத்து ஏதோ பிளான் எழுதினர். அதில் தனது இடது பக்கத்தில் வீடும், முன்னல் தோட்டமும் அதைச் சுற்றி முள் கம்பியும் அங்கு ஹட்டன் தோட்டத்தினுள் நுழைந்து வந்த வழியும், வலது பக்கத்தில் சில செடிகளும் அதன் நடுவில் குடையைப் போல் செடி வெட்டப்பட்டிருப்பதும் குறித்தார்.

“ எனது தகப்பனருக்கு இந்த செடிகளின் நடுவே உட்கார்ந்திருப்பதற்கு மிக இஷ்டம். வெயிற் காலத்தில் அநேக நேரம்

அங்கேயே உட்கார்ந்து ஏதாவது படித்துக் கொண்டிருப்பார்" என்றான் டாம்.

இன்ஸ்பெக்டர் இன்னொரு முறை தன்னைச் சுற்றி நன்றாக பார்த்த பின், "நான் பார்க்க வேண்டியதை பார்த்து விட்டேன்" என்று சொல்லி, இருவரும் வீட்டிற்கு திரும்பினர்.

திரும்பி போகும் போது இன்ஸ்பெக்டர் "இன்றிரவு மரங்களில் நோட்டீஸ் ஒட்டிய இரத்த சின்ன சங்கத்தின் நடத்தையில் ஒரு தவறு, அவர்கள் முன் யோசனைபடி இது செய்ய வேண்டியதில்லை. திடீரென்று ஏதோ நினைத்து இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது" என்றார்.

பிறகு இருவரும் வீட்டினுள் சென்று மெத்தையில் உட்கார்ந்தனர். இன்ஸ்பெக்டர் ஜன்னல் வழியாக வெளியேயுள்ள தோற்றத்தை பார்த்தவாறு, ஏதோ யோசனையி லிருந்தார். அவரைப் பார்த்த டாம் தனக்குத் தானே "இவரோ பெயர் பெற்ற இன்ஸ்பெக்டர். துப்பறிவதில் நிபுணர் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். இவரைப் பார்த்தால் ஒரு சாதாரண மனிதனாக தோன்றுகிறார். முகத்திலோ புத்திசாலித்தனத்தின் அறிகுறியைக் காணோம்" என்று எண்ணினான்.

திடீரென்று இன்ஸ்பெக்டர் "ஆ! தெரிந்து விட்டது. நான் முதலில் நினைத்தது தான் சரி. அவன் இங்கு வந்தது உன்னை மிரட்டி பணம் வாங்க. வரும் வழியில் ஏதோ யோசனை செய்து கீழே தனிப்பட எழுதி யிருக்கிறான். என்னையும் ஸிம்ஸனையும் இக்கேஸை விட்டு நீக்க வேண்டுமென்று முன்பே எண்ணியுள்ளான். ஆனால் உன்னால் எங்களை எங்கள் வேலையினின்று தடுக்க முடியாதென்பதை அந்த முட்டாள் அறியவில்லை. எதற்கும் அந்த நோட்டீஸை காண்பியுங்கள்" என்று கேட்டார். டாம் நோட்டீஸை கொண்டு வந்து கொடுத்தான். அதை அவர் விரித்து கீழே வைத்து "ஆம். கீழே எழுதியது அவசரமாக எழுதியதாக தோன்றுகிறது. காரில் உட்கார்ந்தே எழுதி யிருக்கக்கூடும். நோட்டீஸை முதலில் எழுதும் போது இந்த யோசனை கிடையாது." என்று சொல்லிக் கொண்டே, தனது கன்னத்தை தடவினார். "தற்போதிய புதிய யோசனை என்ன?"

அச்சமயம் வேலைக்காரன் வந்து, டெலிபோன் மணி கீழே அடிப்பதாக தெரிவித்தான்.

டாம் டெலிபோனை எடுத்து கேட்ட பின், இன்ஸ்பெக்டர் வசம் கொடுத்து, "தங்களுக்கு" என்றான்.

இன்ஸ்பெக்டர் டெலிபோனை வாங்கி கேட்டதும், கமிஷ்னர் ஹன்டர் பேசுவதை யறிந்தார்.

"உடனே லண்டனுக்கு வாருங்கள். இன்று மந்திரி சபை கூடப் போகிறது. அங்கு நீங்கள் ஆஜராக வேண்டும்" என்று கமிஷ்னர் தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர் சந்தோஷத்தால் முகமலர்ச்சியுடன் டெலி போனை கீழே வைத்தார்.

"என்ன விஷயம்?" என்று டாம் கேட்டான்.

"நான் மந்திரி சபையில் சேரப் போகிறேன்" என்று சொல்லி, அளவுக்கதிகமாக சிறித்தார். இன்ஸ்பெக்டர் அவ்வாறு சிறித்ததை இதுவரை டாம் பார்த்ததேயில்லை. (தொடரும்.)


## மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழைபைத்து, பீஹுப்பி ஸையிதிஞ பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது விலை அணா. 15

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# கஸஸுல் அன்பியா

இதில் நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியது

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாறூத் மாறூத்தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யாஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸ்உ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுசு அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம் ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கி யிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்கவேண்டியது அவசியம்.

கலிகோ பைண்டு விலை ரூ. 9—8—0

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதற் பாகம் றப்பு கலிகோ பைண்டு.

விலை ரூ. 6—0—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# இஸ்லாமும் நவீன விஞ்ஞானமும்.

டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி)

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய ஆண் குழந்தை யொன்று, ஆண்டவன் கட்டளைப்படி இறந்துபோய் விட்டது. தெய்வாதீனமாக அன்றே சந்திரக்கிரஹணமும் ஏற்பட்டுவிட்டது. அப்போது சில ஜனங்கள் (அயல் மதத்தினர்), நபிகள் பெருமானார் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் ஓடோடியும் வந்து, "முஹம்மதே, உத்தமரே, சத்தியரே, தாங்கள் உண்மையானவர்; தெய்வீகமானவர் என்பதற்கு நாங்கள் பிரத்தியக்ஷமான அத்தாக்ஷியைக் கண்டு கொண்டோம். அதோ பாருங்கள், தங்களுடைய திருக்குமாரர் இறந்துபோனதற்காக, வானத்து அந்தச் சந்திரனும் சோகத்தில் மூழ்கி கறுத்துப் போய் விட்டான்—" என்று கூறினார்கள்.

இதைக்கேட்டு நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) என்ன மொழிந்திருப்பார்கள் என்று கருதுகின்றீர்கள்? மிர்ஜா குலாம் காதியானியைப்போன்ற பொய்யர்களா யிருந்திருந்தால் "ஆம்; நான் தெய்வீக சக்தியாளன்: வானம், பூமி, சூரியன், சந்திரன் நட்சத்திரமெல்லாம் எனக்குள் அடக்கம்" என்று கூறி மூடமக்களின் குபிரியத்தையும் முட்டாள் தனத்தையும் இன்னும் அதிகரிக்கும்படிச் செய்திருப்பார்கள். ஆனல் லோக உத்தாரணத்துக்காகவும், சர்வ லோக சுபிக்ஷத்துக்காகவும், அஞ்ஞான அந்தகாரத்தைப் போக்குவதற்காகவும் அவதரித்த நபிகள் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்ன திருவுளமானார்க ளெனின்:

"சகோதரர்களே! அப்படிக் கருதாதீர்கள். சூரியனும் சந்திரனும், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவுடைய அடையாளங்களில் சிலதாகும். அதற்கும் எம்போன்றோரின் ஜீவிய வாழ்வுக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது. சூரியக்கிரஹணமும் சந்திரக்கிரஹணமும் அந்த அல்லாஹு தஆலாவுடைய குத்ரத் என்னும் மகாத்மியத்தை எடுத்துக் காட்டுகின்றன" என்ற ஆழ்ந்த கருத்தையும் தத்துவத்தையும் எடுத்தோதினார்கள்.

இதைக்கேட்டு, அந்த அயல் மதக் காபிர்களுக்கு, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பால், முன்னிலும் அதிக நம்பிக்கையும் நன்மதிப்பும் ஏற்பட்டன.

முஸ்லிம் சோதரீர்! இந்தச் சம்பவத்திலிருந்து நாம் அநேக விஷயத்தை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பொதுவாக, உலகில் வாழ்மக்களில் பாமரமக்களிடம் பற்பல விதமான வின்னியாஸக் கொள்கைகளும் மூடப்பழக்க வழக்கங்களும் மலிந்திருந்து வருவதைக் காண்கின்றோம். இது இக்காலே மட்டுமல்ல; பல்லாயிரம் வருஷத்துக்கு முன் பண்டைகாலத்திலுங்கூட இருந்து வந்துள்ளன. மேலும், பாமரமக்கள்தான், இத்தகைய வின்னியாஸங்களில் ஆழ்ந்திருந்தார்க ளென்பதில்லை. மெத்தப்படித்த சைன்ஸ்வாதிகளும், விஞ்ஞானிகளும், வானசாஸ்திரிகளுங்கூட இத்தகைய மௌடீக நம்பிக்கையில் சிக்கியவர்களாய்க் காணப்படுகின்றனர்.

சென்ற ஜூன் மாதம் 20-ந் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சூரியனைப் பீடைபிடித்துக் கொண்டது என்று கூறப்படும் கிரஹணம் ஏற்பட்டிருந்த தென்பதை நேயர்கள் மறந்திருக்க முடியாது. அதுவும் சர்வசாதாரணமான கிரஹண மல்லவாம். இப்படிப்பட்ட மகாபாரதூரமான கிரஹணம் 1200-ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிடிப்பது வழக்கமாம். இப்படிப்பட்ட பரிபூரண கடுமையான கிரஹணம் ஆயிரக்கணக்கான வருஷத்துக்குமுன் ஏற்பட்டிருந்ததுண்டு என்றும் இக்காலே வான சாஸ்திரிகள் கூறுகிறார்கள். 'அப்படி உண்டாயிராது' என்று சொல்ல யாருக்கு தைரியமுண்டு; எவருக்கு ஆற்றலுண்டு. அரசாங்க ஆதரபெற்ற வான சாஸ்திரிகள் (ஆப்ஸர்வேட்டரீஸ்) சொல்வதை நாமெல்லாம் ஏற்றுக் கொண்டு தானே ஆக வேண்டியிருக்கிறது!

இத்தகைய சூரிய, சந்திர கிரஹணங்கள் ஏற்பட்டால், நம் போன்ற பாமர ஜனங்களுக்கு அதிலொன்றும் அதிக சிந்தனை உண்டாவதில்லை. "ஏதோ, சூரிய வட்டம் என்னும் அப்பளத்தை எங்கோ வானிலுள்ள பாம்பொன்று கவ்விக் கொண்டு, அதை விழுங்க முடியாமல் விட்டுவிடுகிறது" என்று நம்மனோரில் சில நிரக்ஷரக்குக்ஷிகள் எண்ணிக் கொண்டு சும்மா இருந்து விடுவர். ஒரு சில, புத்திசாலிகள், உடைந்த கண்ணாடித்துண்டு ஒன்றை எடுத்து, மண்ணெண்ணெய் விளக்குச் சுடரில் அதில் கரிஉண்டாக்கிக் கொண்டு, அதன் வழியாக, கிரஹணம் சூரியனின் வட்டத்தின் தேய்வின்—மறைவின் அல்லது விழுங்கப்பட்டதின் அளவை கண்கொண்டு கண்டு களிபேறுவகைக் கொள்வார்கள்.

ஒரு சில வைதிகப் பேர்வழிகள், சூரியனை கிரஹணம் பிடித்ததிலிருந்து சாப்பிடுவதை நிறுத்திவிடுவர்; அது விட்டுத் தொலைத்த பிறகு இவர்களும் ஸ்நானம் செய்து பீடையைத் தொலைத்துவிட்டு ஆகாரம் உட்கொள்வார்கள்.

இவர்கள் இப்படி ஏன் செய்கிறார்கள் என்பது அவர்களைக் கேட்டால்தான் தெரிகிறது. சூரிய-சந்திர-நட்சத்திர கோளங்களின் ஏற்றத்தாழ்வுக்கும், மனிதரின் வாழ்வு-தாழ்வுக்கும் நெருங்கிய சம்பந்த மிருக்கிறதென்று இவர்கள் கூறுகிறார்கள்.

நம் முஸ்லிம்களிலும் மதபக்தியும் வைதிகாசாரமும் உடைய நல்லோர்கள், சூரிய-சந்திரனைப் பிடித்த பீடை நம்மையும் பிடித்துக் கொள்ளக்கூடாதே என்ற காரணத்துக்காக, ஏழை எளியோர்க்கு தானதர்மம் செய்கிறார்கள். ஸத்கா இறக்கிக் கொடுக்கிறார்கள். ஏதும் உண்ணாமல் இருந்து, இறுதியில் தலை முழுகுகிறார்கள். இன்னும் சில முஸ்லிம் பக்தர்கள், ஷரீஅத்துக் கட்டளையை ஏற்று. 'ஸலாத்துல் குஸூப்' என்ற கிரஹணத் தொழுகை நிறைவேற்றி ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டு துஆ கேட்கிறார்கள்.

ஆங்கிலம் மட்டும் மெத்தப் படித்து விட்டு நவநாகரீகத்தில் மூழ்கிப் போன 'ஜென்டில் மென்'கள் சிலர், இத்தகைய வைதீக பக்தர்களின் தூய செயல்களை மூடச் செயல் என்றும் மௌடிகத் தன்மை யென்றும், கூறி எள்ளி நகையாடுகின்றனர். அதாவது ஏளனம் செய்கின்றனர். பாபம், இவர்களுக் கென்ன தெரியும்! சூரிய சந்திரக் கிரஹணங்கள் ஏற்பட்டால், அமெரிக்கா, ஐரோப்பா நாட்டு வானசாஸ்திர விஞ்ஞானிகள் எத்துணைக் கவலைப்பட்டு என்னென்ன செய்கிறார்க ளென்று! அதுமட்டுமல்ல! இந்தியாவிலுள்ள மிகப் பெரும் வானகோள ஆராய்ச்சி நிலையத்து அதிகாரியான பிரபல வான சாஸ்திரி டாக்டர் ஜனரல் திரு எஸ். பாஸூ என்பவர், ஜூன் மாத சூரியக் கிரஹணத்தின் போது செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி இங்கு குறிப்பிடத் தக்கதாகும். அது :—

"சூரியக் கிரஹணத்தால், மனிதருடைய ஜீவிய வாழ்வு மீது சாதக-பாதகம் ஏற்படுகிறது என்று சொல்லப்படும் விஷயம் முற்றும் தவறாகும். இதை யொட்டி சிலர், அந்த சந்தர்ப்பத்தில் உண்ணாமலும் சுகிக்காமலும் சம்போகம் செய்யாமலும் இருந்து விடுகின்றனர். கிரஹணம் விட்டதும் சமுத்திரத்திலோ, வீட்டிலோ ஸ்நானம் செய்கின்றனர். இப்படி யெல்லாம் எனக் கொன்றும் நம்பிக்கை இல்லை. அப்போது உண்ணாதிருக்கும் வழக்கமோ, அதன் பின் ஸ்நானம் செய்கின்ற பழக்கமோ எனக்கில்லை. ஆனால், மனிதனின் இஷ்டத்துக்கும் ஆதிக்கத்துக்கும் அடங்காத ஏதோ ஒரு பெரிய மர்ம சக்தி, அண்ட கோளங்களை ஆட்டி வைக்கிறது என்பதில் மட்டும் எனக்கு பூரண நம்பிக்கையும், பயபக்தியும் உண்டு" என்பதே அந்த விஞ்ஞானியின் சொற்பொழிவுச்சாரம்!

"வலஹூ அஸ்லம மன் பிஸ் ஸமாவாத்தி வல் அர்லி"—அதாவது "வானங்களிலும் பூமியிலுமுள்ளவை யாவுமே, அந்த இறைவனுக்கு

வழிப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன" என்பது இஸ்லாமிய வேதத் திருவாக்கியத்தின் கருத்தாகும். அண்டகோளங்களை ஆட்டி அசைக்க வைக்கும் சக்தி ஒன்று உண்டு என்று விஞ்ஞானிகளும் வான சாஸ்திரிகளும், மறை பொருளாய்-சூசகமாய் சொல்கிறார்களே அதைத்தான் நம் இஸ்லாத்தின் திருமறையான குர்ஆன் ஷரீப், மிக எளிய வாக்கியத்தில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எடுத்தியம்புகிறது.

சந்திரன், சூரியன், கோடிக் கணக்கான நட்சத்திரங்கள் யாவும், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவுடைய கட்டளைப் பிரகாரமே இயங்குகின்றன வென்பதில் சந்தேகமில்லை. அவ்வாறே, மழை, வெய்யில், பனி, காற்று, முதலியவைகளுங் கூட அவ்வாண்டவனுடைய கற்பனைப் படியும் ஆக்ஞைப் படியும் உண்டாகின்றன; மறைகின்றன.

சோணுமாரியாய் மழை பெய்யும் போது வானத்தில் கருமேகங்கள் அடர்ந்து, சூரியன் மறைந்து குளிர்ச்சி உண்டாவதைக் காண்கின்றோம். ஆம், சூரியன் காற்றில் மேகத்தில் மறைந்திருந்தால் குளிர்ச்சி உண்டாகிறது. உலகில் இத்தகைய மழையும் காற்றும் குளிர்ச்சியும் மனித கோடிகளின் ஜீவிய வாழ்வுக்கு அத்தியாவசியமாகும். ஆனால், மழை பெய்யாமலும் மேகம் சூழ்ந்து கொள்ளாமலும் குளிர்ச்சி உண்டாகாமலும், வெறுமனே சூரியன் மறைக்கப்படுவதோ ஒளி குன்றிப் போவதோ, மனித ஜீவ சமூகத்துக்கு நன்மை பயப்பதற்குப் பதிலாய் தீமை பயப்பதேயாகும். இதை முஸ்லிம்களாகிய நாம் பலா-முஸீபத்து என்று சொல்லுகிறோம். இதற்காக, இறைவனிடம் வேண்டிக் கொள்கிறோம்; அஞ்சுகிறோம்; தொழுதுக் கொள்கிறோம்; துஆ கேட்கிறோம்.

மேனாட்டு விஞ்ஞானிகளும் வான சாஸ்திரிகளும், இஸ்லாத்தின் போதனைகளையும் அகீதாக்களையும் ஏற்றுக் கொள்ளாமற் போயினும், இஸ்லாத்தின் தத்துவங்களை, நம்பி, தங்களை யறியாமலேயே வாய் விட்டுக் கூறியும் அனுஷ்டித்துக் காட்டியும் வருகின்றனர். இது ஒன்றே இஸ்லாம் தெய்வீக சக்தியுள்ள சன்மார்க்கம் என்பதற்கு ஓர் அத்தாட்சியாகும். ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு, முன் வஹீ வெளிப்பாட்டின் மூலம், எம்பெருமானார் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் சூசகமாய் எடுத்துரைத்த விஷயங்களையே, இன்று விஞ்ஞானிகளும், வான சாஸ்திர ஆப்ஸர்வேட்ரீகளும் வியக்தமாய் எடுத்துக் கூறி வருகிறார்கள். வாழ்க இஸ்லாம்!

(10-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : : சாரசங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## 2-வது அத்தியாயம்

### பனீ இஸ்ராயீல் கூட்டத்துக்கு அறிவுறுத்தல்

ஏ பனீ இஸ்ராயீல் (இஸ்ரவேல்) கூட்டத்தார்களே, (இறை வனாகிய) யாம், உங்களுக்குச் செய்த உபகாரங்களை எண்ணிப் பாருங்கள். யாம், உங்களை உலகத்திலுள்ள ஜன சமூகத்தாரில் உயர்வானவர்களாய் ஆக்கி வைத்தோம். அந்த (கியாமத்து) நாளைப் பற்றிப் பயப்படுங்கள். அப்போது யாரும் எவருக்கும் (பக்கபலமாய்) உபயோகப்படவே மாட்டார்கள். அக்காலை எவருடைய சிபாரிஷும் (இறைவனிடம்) செல்லுபடி (கபூல்) ஆகமாட்டாது. (வழிதவறிய) அன்னவர்களிடமிருந்து எவ்வித பிரதிப்பலனும் அங்கீகரிக்கப் படமாட்டாது. மேலும் அவர்களின் (பரஸ்பர) உதவியும் ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. ஏ பனீ இஸ்ராயீல் (யூத-கிறிஸ்துவக்) கூட்டத்தார்களே! அந்த (ப் பழைய) நாளையும் எண்ணிப்பாருங்கள். உங்களுக்குப் பெரும் பெரும் துன்பங்கள் இழைத்துவந்த 'பிர்அவ்னு'டைய (கொடுங்கோல்) ஜனங்களி (ன் பிடியி) னின்று, நாம் உங்களைக் காப்பாற்றினேமே; அந்தக் (கொடுங்கோல்) கூட்டத் தினர், உங்கள் ஆண்மக்களை (அறுத்துக்) கொன்றார்கள்; உங்கள் பெண்மக்களை (அபகரித்து)த் தங்கள் பணிவிடைக்கு (அடிமை யாக்கி) உயிருடன் வைத்துக் கொண்டார்கள். (ஏ இஸ்ரவேலர் களே!) மேலும் நன்றாய் நிச்சயத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; அந்தச் சம்பவங்களில் உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து சோதனை உண்டாய்க் கொண்டிருந்தது. இன்னும் அந்த நேரத்தை (ய அபூர்வ நிகழ்ச்சியை) யும் எண்ணிப் பாருங்கள். (அதாவது:) நாம் உங்களுக்காக சமுத்திரத்தைப் பிளந்து (பாதையுண்டாக்கி) உங்களைக் காப்பாற்றி வைத்தோம். அப்போது (உங்களைப் பின் தொடர்ந்து பிடிக்கவந்த) பிர்அவுனுடைய (சேவக) கூட்டத்தாரை, உங்கள் பார்வையின் எதிரிலேயே மூழ்கவடித்து அழித்தோமே! (ஸூரா: அல்பகரா: ருகூ: 6.)

### 'மன்னு-ஸல்வா' வானிலிருந்து அருளப்பட்டது!

ஏ பனீ இஸ்ராயீல் கூட்டத்தார்களே! (இறைவனாகிய) யாம், உங்கள்பால் சீராக நிழல்போட்டுக் காத்தோம். உங்களுக்காக

(சுவர்க்க லோகத்தினின்று) மன்னு-ஸல்வா (என்னும் உணவு பதார்த்தத் தட்டு) க்களை இறக்கி வைத்தருளினோம். மேலும் யாம் அனுமதித்து உங்களுக்குத் தூய்மையான உணவு வகை (ரிஸ்கு) கிடைக்க வைத்தோம். அதைத் திருப்தியாக நீங்கள் உண்ண அருள் புரிந்தோம். இப்படியெல்லாம் இருந்தும், நீங்கள் நன்றி கெட்டவர்களாய் மாறினீர்கள். மேலும் நீங்கள் (உங்கள் செயலால்) எங்களுக்கொன்றும் இடையூறு செய்து விடவில்லை; உங்களுக்கே நீங்கள் (படு) நஷ்டத்தை விளைவித்துக் கொண்டீர்கள். (ஸூரா: அல்பகரா: ருகூ: 6.)

## பனீ இஸ்ராயீல்களின் 'நமக் ஹராம்' தன்மை

(ஏ பனீ இஸ்ராயீல் கூட்டத்தார்களே:) மூஸா (நபி) விடம் நீங்கள் (வற்புறுத்திக்) கேட்டதை நினைத்துப் பாருங்கள். "ஏ மூஸாவே, (வானத்து மன்னு-ஸல்வா என்ற) இந்த உணவை மட்டும் கொண்டு நாங்கள் பொறுத்துக் கொள்ள முடியாது. எங்களுக்காக, நீர் உமது இரக்ஷகனிடம் வேண்டுதல் புரிந்து, அவன் எங்களுக்காக, பூமியிலிருந்து விளையக்கூடிய (உணவுப்) பொருள்களான கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பருப்பு, வெங்காயம் முதலியவையும் கொண்டு வந்து கொடுப்பீராக" என்று கேட்டு ஹடம் பிடித்தீர்கள். அதற்கு மூஸா (நபி) உங்களை நோக்கி, "ஏ ஜனங்களே! உயர்தரமான ஓர் (உணவுப்) பொருளுக்குப் பதிலாக, நீங்கள் கீழ்தரமான (அற்ப உணவுப்) பொருள்களைக் கேட்கிறீர்களே! சரி உங்களுக்கு அது (கட்டாயம்) வேண்டுமாயின், (அடுத்த) ஒரு ஊருக்குள் (எகிப்துக்குள்) பிரவேசியுங்கள்; அங்கு நீங்கள் கேட்கும் (அற்ப உணவுப்) பொருளெல்லாம் (எளிதில்) கிடைத்து விடும்" என்று பதில் சொன்னார். (ஆண்டவன் கட்டளையை விட வயிற்று உணவைப் பெரிதாகக் கருதிய) அந்தக் கூட்டத்தினர், அங்ஙனம் போய்விட, ஆண்டவன் அவர்கள் மீது அவமானத்தையும் பிறரிடம் கையேந்தும் தன்மையையும் போட்டு வைத்தான். எனவே ஆண்டவனுடைய கோபத்துக்கு அவர்கள் ஆளானார்கள். ஏனெனின் (ஏற்கனவே) இன்னோர் இறைவனுடைய கட்டளைகளை மீறுகிற (நமக் ஹராம் தன்மை யுடைய) வர்களாகவே இருந்தனர். மேலும், இவர்கள் நபிமார்களையும் அநியாயமாய் கொலை செய்திருக்கிறார்கள். மேலும், (சன்மார்க்க) வரம்பை மீறுபவர்களாகவும், (நன்றி கெட்ட) வழிகேடர்களாகவும் அவர்கள் இருந்தனர்; (ஆதலால் இக்கதி யடைந்தனர்). (ஸூரா: அல்பகரா: ருகூ: 7.)

## இஸ்ரவேலர் குரங்குகளாகவும் மாற்றப்பட்டனர்

ஏ பனீ இஸ்ராயீல் (யூத கிருஸ்துவக்) கூட்டத்தினர்களே! உங்களுக்கு முன்னிருந்த (இஸ்ரவேலர்) வர்க்கத்தையும் எண்ணிப் பாருங்கள். அன்னோர் யவ்முஸ் ஸப்த் என்னும் வணக்க ஒழுக்கத்துக் குரிய (சனிக்கிழமை) அன்று, வரம்பை கடந்துப் போய் (மாறு செய்து) விட்டனர். ஆதலின் (இறைவனாகிய) யாம் (கோபப்பட்டு) அவர்களை நோக்கி “ ஏ! நீங்கள் குரங்குகளாக மாறிப் போவீர்களாக; நீங்கள் எங்கு சென்றாலும் விரட்டப்பட்டு (சீரழிந்து) போவீர் களாக ” என்று சபித்து விட்டோம். இந்த சம்பவத்தைக் கொண்டு அக்காலத்திலிருந்த ஜனங்களும், அவர்களது காலத்துக்குப் பின்வந்த ஜனங்களும் புத்திமதிப் பெறுவதற்காக (அப்படி) ஆக்கிவைத்தோம். உண்மையில் (இறைவனைப் பயந்த) நல்லவர்களுக்கும் இப்படிப்பட்ட விஷயங்களில் நல்ல படிப்பினை ஏற்படுத்தியுள்ளோம். (ஸூரா: அல்பகரா: ருகூ: 8.)

## நல்லொழுக்கப் போதனை பெற்ற இஸ்ரவேலர் சிலரே!

(இறைவனாகிய) யாம் பனீ இஸ்ராயீல் கூட்டத்தினர்களிடம், வாக்குறுதிப் பெற்ற அந்த நாட்களை நினைத்துப் பாருங்கள். அதாவது “ அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த தெய்வத்தையும் நாங்கள் வணங்க மாட்டோம்; பெற்ற தாய் தந்தையரிடமும், உற்றார் உறவின ரிடமும், யத்தீம் (அனாதை) களிடமும், தேவைப்படும் எளியோர்க ளிடமும் நாங்கள் நல்லொழுக்கமாய் நடந்து கொள்வோம்; எல்லா ஜனங்களுடனும் நற்குணத்துடன் பழகிக் கொள்வோம்; தொழு கையை நிறைவேற்றுவோம்; தான தர்மம் கொடுப்போம் ” என்று அவர்கள் அறுதிமானம் (பிரதிக்ஞை) செய்து கொடுத்தார்கள். ஆயினும் அவர்களில் சிலபேர்களைத் தவிர்த்து மற்றவர்கள் அப்பிர திக்ஞையை மீறி (பிறழ்ந்துப்) போய்விட்டார்கள். (ஸூரா: அல்பகரா; ருகூ 10)

## கொலையும் கொடுமையும் செய்யாதீர்கள், இஸ்ரவேலரே!

ஏ பனீஇஸ்ராயீல்களே! யாம் உங்களிடத்தில் வாக்குறுதி பெற்றோமே அந்த நாளை நினைத்துப் பாருங்கள். “நீங்கள் இனி மேல், இரத்தப் பிரவாகம் (கொலை) புரியக்கூடாது; உங்கள் சொந் தக்கார ஜனங்களை ஊரைவிட்டு விரட்டக் கூடாது” என்று யாம் கோரியதற்கு ஒப்புக்கொண்டீர்கள். இதற்கு நீங்கள் சாக்ஷியக்காரரா கவும் இருக்கிறீர்கள். அப்படியிருந்தும் நீங்களே (பிறகு வாக்குறுதி களை மீறிவிட்டீர்கள்;) சொந்த ஜனங்களை அடித்துத் துன்புறுத்து

கிறீர்கள். உங்களில் சில ஜனங்களுக்கு நீங்கள் எதிர்க்கட்சியினராகி, அன்னோர்க்கு அநியாயம் (கொடுமை) புரிந்து, இம்சை செய்கிறீர்கள். அவர்களை வீட்டைவிட்டும் ஊரைவிட்டும் (பிரஷ்டம் செய்து) விரட்டுகிறீர்கள். பிறகு அவர்கள் சிறைப்பட்டு உங்களிடம் அணுகினால் அதற்குப் பரிகாரம் கொடுத்து, விடுவித்துக்கொள்கிறீர்கள். இப்படிச் செய்வது உங்களுக்கு ஹராமாயிருக்கவும் செய்கிறீர்கள். (ஸூரா: அல்பகரா; ருகூ: 10.)

## பன்னிரண்டு தலைவர்களைக் கொண்ட கூட்டத்தின் செயல்

இறைவனாகிய யாம் அந்த (பனீஇஸ்ராயீல்) கூட்டத்திலிருந்து பன்னிரண்டு பேர்களை தலைவர்களாக்கி நியமித்தோம். மேலும் அல்லாஹ்வின் ஆக்ஞை உண்டாயிற்று: "ஜனங்களே! நான் உங்களுடன் (துணையாக) இருப்பேன். எனவே நீங்கள் தொழுகை நிறைவேற்றுவீர்களாக. தான தர்மம் (ஜக்காத்) செய்வீர்களாக. எமது திருத்தூதர் (ரஸூல்மார்)களுக்கு வழிப்பட்டு, அவர்களுக்கு சகாயம் செய்வீர்களாக. இறைவனுக்காக(அவன் பெயரால்)நன்மையான கடனைக் கொடுப்பீர்களாக. இப்படியெல்லாம் ஒழுகுவீர்களானால் (அல்லாஹ்வாகிய) நான் உங்களுடைய பாபங்களைப் போக்கிவிடுவேன். கீழ்பாகத்தில் நந்நதிகள் ஒலித்தோடும் படியான (சுவர்க்கலோக) உத்தியானவனங்களிலே உங்களைப் பிரவேசிக்கவைப்பேன். இத்தகைய அறுதிமானத்துக்குப் பிறகும், உங்களில் எவரேனும் மாறுபட்டுத் திரும்பி விடுவாரானால், அவர் (சன்மார்க்க) நேர்வழியிலிருந்து பிறழ்ந்து கெட்டலைபவராவார். அவர் வாக்குறுதியை மீறி விட்டவருமாவார். எனவே இப்படி மீறிப் போனவர்கள் மீது நாம் முனிவு (லஃனத்து) செய்துவிட்டோம். அவர்களின் ஹிருதயங்களை இருட்டாக்கிவிட்டோம். அன்னோர் தவ்ராத் வேதத்தின் வாக்கியங்களையே மாற்றிப் புரட்டி விட்டார்கள். அவர்களுக்கு கிடைத்த உபதேச நூலை திரஸ்கரித்து விட்டார்கள். அதில் ஒன்று ஒரு முக்கியமான பகுதியை (பிற்காலத்தில் வரும் இறுதிநபி முஹம்மத் (ஸல்) அவர்களைப்பற்றி ஈமான் கொள்வதை) அவர்கள் மறந்து விட்டுவிட்டனர். ஏ நபியே (முஹம்மதே!) அவர்களில் சிலபேர்களைத் தவிர்த்து மற்றெல்லோரும் பிரதிக்ஞையை பங்கம் செய்துவிட்ட செய்தி உமக்கு வந்துகொண்டு தானிருக்கிறது. நீர் இஷ்டப்படுவீராயின் அப்படிப்பட்டவர்களின் தப்பிதங்களையும் மன்னித்து விடலாம்; அவர்களின் தவறுகளை(மேன்மேலும்) பொருட்படுத்தாமலுமிருக்கலாம். அல்லாஹு (தஆலா) இப்படிச் செய்து பிறருக்கு நன்மை (இஹ்ஸான்) செய்பவர்களை நேசிக்கிறவனாக இருக்கின்றான். (ஸூரா: அல்மாயிதா; ருகூ: 3)

## மூஸா நபியின் போதனையும் அவர் கூட்டத்தின் மாறுபாடும்.

நபி மூஸா (அலை) தன்னுடைய கூட்டத்தாரை நோக்கி(ப் போதனை செய்து) கூறியதாவது:—அல்லாஹு(தஆலா) உங்கள் மீது பல உபகாரங்களைப் புரிந்திருக்கிறான்; ஆதலின் அவனை அதிகமாக தியானியுங்கள். அவன், உங்களிலிருந்தே நபிமார்களைத் தோன்றச் செய்தான். மேலும் உங்களை (பூமியில்) அரசனாகவும் ஆக்கி வைத்தான்; அவன் உங்களுக்குக் கொடுத்த (அருட்பாக்கியத்)தைப் போல், உலகத்தில் வேறு யாருக்கும் அவன் கொடுத்ததில்லை. மேலும் ஏ எனது (இஸ்ரவேல்) கூட்டத்தார்களே! ஒரு பரிசுத்த பூமியில் (ஷாம் என்னும் ஸிரியா நாட்டில்) நீங்கள் இனி (படையெடுத்துப்) பிரவேசிப்பீர்களாக. இறைவன் உங்கள் அதிருஷ்டத்தில் எழுதியதை யடைவீர்களாக. மேலும், இதில் நீங்கள் புற முதுகு காட்டி (தோற்று) ஓடாதீர்கள். அதனால் பெரு நஷ்டத்துக்கு ஆளாகாதீர்கள்" (என்றெல்லாம் கூறினார்.) அதற்கு அந்த (நன்றிகெட்ட அதமக்) கூட்டத்தினர், "ஏ மூஸாவே! அந்த நாட்டிலே, மிக வல்லமைப் பொருந்தியவர்கள் இருக்கிறார்களே! அவர்கள் சுயமே அவ்வூரை விட்டு (ஓடிப்) போகாதவரை, நாங்கள் சுயமே அந்த பூமியில் பிரவேசிக்கமாட்டோம்; அப்படி அவர்கள் (ஊரை காலி செய்து கொண்டு) போய்விட்டால், நாங்கள் அவசியம் அதனுள் பிரவேசிப்போம்" என்று (கோழைத்தனமாக) பதில் சொல்லி விட்டார்கள். ஆயினும் அந்தக் கூட்டத்தினரில் இருவர் ('யூஷா' என்பவரும் 'காலப்' என்பவரும்) இருந்தனர். இவர்கள், அல்லாஹ்வுக்குப் பயப்படுகிறவர்களா யிருந்தனர். எனவே அவ்விருவர்க்கும் இறைவன், தன் அருள் பாக்கியத்தின் வாயிலாய், தைரியத்தை (வீரத்தை) கொடுத்தான். அவ்விருவரும் முன்வந்து, கோழை மக்களை நோக்கி(ஏ சகாக்களே)நீங்கள் அஞ்சவேண்டாம், "நீங்கள் ஒரே ஒருமுறை(தைரியத்தோடு)படையெடுத்து நகரவாயலுக்குள் புகுந்து விடுங்கள். (இறைவனருளால் உங்களுக்கு வாயல் திறந்து) நீங்கள் உள்ளே பிரவேசித்து விடுவீர்களாயின், பிறகு (பூரண) வெற்றி உங்களுடையதே தானாகும். எனவே நீங்கள் விசுவாசம் (ஈமான்) உடையவர்களாயின் அல்லாஹ்வின் மீது பூரணமாக நம்பிக்கை வையுங்கள்" என்று சொன்னார்கள். இதற்குப் பதிலாக அக்கூட்டத்தார் (நபியை நோக்கி) "ஏ மூஸாவே, அங்கு(கொடிய)பகைவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஒரு போதும் (படையெடுத்துப்) பிரவேசிக்கவே மாட்டோம். (தேவையானால்) நீரும் உமது அல்லாஹ்வுமே

போய் சண்டை போடுங்கள்; நாங்கள் இங்கேயே உட்கார்ந்து (வேடிக்கை பார்த்துக்) கொண்டிருக்கிறோம்” என்று சொன்னார்கள். மூஸா (நபி) இதைக்கேட்டு(அதிருப்தியடைந்து அந்த கூட்டத்தை நோக்கி) “என்னுடைய இரக்ஷகன், என் சொந்தத்துக்கும் என் சகோதரர் ஹாரூனுக்கும் தவிர வேறு யாருக்கும் இனி (பாதுகாக்கும்) பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டான். இறைவா! என்னுடைய வேண்டுதல் யாதெனில், இந்த பாபக்கார கூட்டத்துக்கும் எமக்கும் இடையில் பிரிவினை ஏற்படுத்தி வைத்துவிடு” என்பதே. அதற்கு, (எல்லாம் வல்ல) இறைவன் “(மூஸாவே) அப்படியாயின், இந்தப் பூமியானது (ஊர்வாசம்) அவர்களுக்கு நாற்பது வருஷகாலம் வரை கிடைக்காமல் அற்றுப்போகட்டும். இவர்கள், நகர் இழந்து எகிப்து நாட்டுக்காடுகளில் அலைந்துத்திரியட்டும். எனினும்(நல்லோர்களாகிய) நீங்கள் இந்த வழிகெட்டுப்போன ஜனங்களின் (சீர்கேடான) நிலை மீது (கொஞ்சமும்) அனுதாபப்பட வேண்டாம்” என்று திருவுளமானான். (ஸூரா: அல்மாயிதா; ருகூ:4)


## மஜ்மூஉல் ஸலவாத்து

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த துஆ கன்ஜுல் அர்ஷும், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் க்ஷேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும் மற்றும் ஸலவாத்துக்கெல்லாம் தாயானதுமான உம்மு ஸலவாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்தீய்யா ஸலவாத்தும், இன்னும் ஸெய்யிதினா குத்புல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ்மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம்போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா. 15

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 15

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# "ஏ இஸ்லாமியனே!"

(மூலம்: அல்லமா இக்பால்.)

(தமிழாக்கம்: தத்தமங்கலம், B. A. ஸான்னு.)

நீ கற்றதும் கற்றுக்கொண்டிருப்பதும் பிறருடைய அறிவு!

உன் முகம் கடன் வாங்கிய சாயத்தால் பூசப்பட்டுள்ளது!

பிறரின் ஆச்சாரங்களை கடைபிடித்து அதன் மூலம் பெரும் பதவிகளை எட்டிப்பிடிக்கத் திட்டமிடுகிறாய் நீ!

நீ உண்மையில் உன்னுடையவன்தானா என்பதுகூட சந்தேகம்!

உன் கடமை, உன் கடைமைக்குரிய செயல்கள் அத்தனையும் அன்னிய ஆச்சாரங்களோடு பின்னிக்கிடக்கிறது!

நீ பேசுகிறாயே அந்தப் பேச்சு அது இரவல் வாங்கியவை! உன் உள்ளத்திலே ஊறுகிறதே கற்பனை அதுவும் நிச்சயம் இரவல் தான்!

உன் வீணையில் எழுப்புகிறாயே அந்த நாதம், ஆம்! அதுவும் இரவல்!

குறுட்டு வெளிச்சத்தைக் கொடுத்தபடி உன் விளக்கில் எரிகிறதே அந்தத் திரி, அந்தோ! அதுவும் இரவல்!

அதோ! அந்தப் பாத்திரத்தில் நிரப்பி வைத்திருக்கிறாயே (புளிக்கும்) முந்திரிச்சாறு அதுவும் இரவல். ஏன்! அந்தப் பாத்திரம் கூட இரவல் தான்!

நீ சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சூரியன்! உன்னையே நீ ஒரு முறை உற்றுப்பார்!

சூரியனாகிய நீ எதற்காக நட்சத்திர ஒளியை கடன் வாங்க வேண்டும்? (வெட்கமில்லையா உமக்கு?)

நீ எத்தனை நாட்கள்தான் அணல் விளக்கு ஒளியின் நடுவிலிருந்து கொண்டு நர்த்தனம் ஆடுவாயோ, தெரியாது!

உன் ஒளியை! உனக்கே உரிதான சுடர் ஒளியை! உனக்கு உள்ளம் என்று ஒன்றிருந்தால் பிரகாசிக்கச் செய்வாயாக!

---

187046

திருச்சி

## ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்களின் சரித்திரச் சுருக்கம்

இதில் ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்கள் ஒரு அரச குமாரனுக யிருந்து தனது தந்தை காலஞ்சென்றபின் தானே நீதிநெறியுடன் அரசு புரிந்து வரும் காலத்தில், ஓர் சொர்ப்பனங் கண்டதின் காரணமாக, சிம்மாசனத்தை விட்டு ஷய்க்கைத் தேடிச்சென்று, முரீது வாங்கியதும், பின்பு பிரயாணத்தில் தங்களுக்கு எதிராக வந்த அநேக பூதங்களை எதிர்த்து வென்றதும், பின் இலங்கைக்கு போய் ஆதம் (அலை) மலையில் ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்து "தப்லே ஆலம்' என்னும் பட்டத்தைப் பெற்றபின் திருச்சி வந்ததும், அவர்கள் செய்த கருமத் அற்புதங்களும், அவர்களின் வபாத்தும் மிக விபரமாக விளக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு. 8

## ஹஸ்ரத் ஷய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்

இப்புத்தகத்தில் ஹஸரத் ஸெய்க் பூஅலி கலந்தர் ஷர்புத்தீன் பானிபத்தி (ரஹ்) அவர்கள் பிறந்ததும், அவர்கள் நகர வாசத்தை வெறுத்து காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் போய் இறைவனது தியானத்தில் மூழ்கியதும், அவர்களுக்கு முர்ஷித் (குரு) ஹஸ்ரத் ஸெய்யிதினு ஆஷிக் குதா (ரஹ்) அவர்களின் தரிசனம் வாயப் பெற்றதும், அவர்களின் மகத்தான கருமத்துகளும், அவர்களின் வபாத்தும், அவர்கள் பேருக்கு ஓதப்படும் "ஸெஹரமனி பாத்திஹா" வின் விபரமும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணு. 4

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# "வின்ஸ்டன் சர்ச்சில்"

(முஹம்மது தாவூது)

## (5—வது பகுதி)

பதவி ஏற்றதும் முதல் நடவடிக்கையாக தமது தலைமைக் காரியாலயத்தில் பட்டாள உத்தியோகஸ்தர்களுக்கு அவர் விருந்துபசாரம் நடத்தினர். அவர்களெல்லாம் அமர்ந்ததும், கம்மலான தொனியில் போர் பிரகடனம் செய்யப்படுகிறது என அவர் அறிவித்தார். முழுமூச்சுத் தாக்குதல் நடத்துமாறு அவர் உத்தரவிட்டார். இத்தாக்குதல் மூன்று தினங்கள் நீடித்தது.

ஸ்காட் துப்பாக்கி வீரர்களுக்கே சர்ச்சில் கர்னலாக விருந்தார்' ஸ்காட்லாந்து வீரர்கள் பெருமை யுள்ளவர்கள். முற்றிலும் அன்னியரும் ஆங்கிலேயருமான ஒரு தளபதிக்கு அவர்கள் தொந்தரவு விளைவித்திருப்பார்கள். ஆனால், சர்ச்சிலின் கவர்ச்சிகர போக்கு அவர்களுக்குப் பிடித்திருந்தது. முதலில் ஏற்பட்ட அருவருப்பு நீங்கியதும் மாஜி மந்திரி யொருவரைத் தலைவராகக் கொண்டிருப்பது பற்றி அவர்கள் பெருமை கொள்ள ஆரம்பித்தனர். மேலும், தமது கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு அவர் விருந்தளித்தபோது அவ்விருந்தில் பிரசன்னமாகி யிருந்த ஒவ்வொரு உத்தியோகஸ்தரின் பெயர், சரித்திரம் முதலியவற்றை அவர் தெரிந்து கொண்டுள்ளார் என்பதை அறிந்து அவர்கள் அகமகிழ்ச்சி அடைந்தனர்.

ஸ்காட் துப்பாக்கி வீரர்கள் தமது அரண்களுக்குச் சென்று, ப்ளோக்ஸ்டீர்ட் அருகேயுள்ள அமைதியான வட்டாரத்தை கைப்பற்றியதும், ஒவ்வொரு யுத்த நடவடிக்கையையும் சர்ச்சில் கூர்ந்து கவனித்து வந்தார். அதிகாலையிலும் இரவு வெகுநேரமான பிறகும் போர் நிகழும் ஸ்தலத்துக்கு அவர் சென்று வந்து கொண்டிருந்ததாகவும் தினந்தோறும் குறைந்த பக்ஷம் மூன்று தடவை அவர் அந்த ஸ்தலத்தைச் சுற்றி வந்ததாகவும் இவற்றிலொரு விஜயம் இருட்டிய பிறகு, இரவு 1 மணி சுமாருக்கு நிகழ்ந்த தென்பதாகவும் அவரது உத்தியோகஸ்தர்களி லொருவர் கூறினர்.

அவரது தலையீடு அவரது படையினருக்குப் பெருஞ்சுமையாக விருந்தது. அரண்கள் அமைப்பதில், உபயோகிக்கப்படும் மணல் பைகள் விஷயத்தில் அவர் நிபுணராகத் திகழ்ந்தார். மணல் பைகள்

உபயோகிக்கப் பட்டபோது, அதுபற்றி அவர் சொற்பொழிவாற்றத் துவங்கி விடுவார். தமது வரையறையில்லா அறிவை அவர் பிரயோகித்தது சில சமயங்களில் பிரயோஜன மில்லாமற் போயிற்று. அவரது ஆக்ஞைகளை அவரது துருப்புக்கள் மன மகிழ்ச்சியோடு நிறைவேற்றத் துவங்கி விடுவர்; பின்னர் எல்லாம் சரிப்பட்டுப் போகும்.

பீரங்கிப் பட்டாளம் அமைப்பதில் கர்னல் சர்ச்சில் அதிக அக்கரை காட்டினர். பதினெட்டு ராத்தல் எடையுள்ள குண்டுகளை வீசக்கூடிய பீரங்கி அவரது படைக்குச் சொந்தமாக விருந்தது. இரவு வேளைகளில்கூட இது முழங்கிக் கொண்டிருக்க வேண்டுமென அவர் விரும்பினர். "ஜெர்மன் சோல்ஜர்களின் தூக்கத்தை நாம் சீர் குலைப்போம்" என தமது துருப்புகளிடம் அவர் கூறினர். துரதிர்ஷ்ட வசமாக அவர்களது தூக்கம்தான் கலைந்தது. அனேக பீரங்கிகளைக் கொண்டு வந்து நிறுத்தி, பதில் நடவடிக்கையாக குண்டுகளை ஜெர்மனியர் பொழியத் துவங்கினர். உத்தியோகஸ்தரொருவர் கூறியபடி, "அது முதற் கொண்டு தொடர்ச்சியாக ஏற்பட்ட வெடிகளின் காரணமாக இரவுகள் பயங்கரமாகக் காட்சியளித்தன."

எந்த சந்தர்ப்பத்திலும் சர்ச்சில் கலக்க மடையவில்லை. நாடோடி தகர வேலைக்கார ஞெருவன் அவருக்காகத் தகர ஸ்நான தொட்டி செய்து கொடுத்தார். இம்மாதிரியான தொட்டி அதற்குமுன் செய்யப்பட்டதுமில்லை; அதற்குப் பிறகும் செய்யப்படவில்லை. பிரம்மாண்டமான சோப்புத் தட்டு மாதிரி அது அமைந்திருந்தது. தமாஷ் பேர்வழியான அந்த ஆள் 'சுக்கிரன் சங்கு' (Venus Shell) மாதிரி புல்லாங்குழல் போன்று சந்துகள் உள்ள பக்கங்களையும் ஏற்படுத்தி யிருந்தார். சில மரங்களுக்கு அடியில் இந்த தொட்டியில் வேலைக்காரன் வெந்நீர் நிரப்பியதும் தினந்தோறும் காலை பத்துமணி சுமாருக்குக் கர்னல் இதற்குள் பிரவேசிப்பது வழக்கம். பக்கத்தி லிருந்த மதுபான பீப்பாயில் கிராமபோனை சர்ச்சில் வைத்தார். ரிகார்டுகளை போட்டுக் கொண்டிருக்குமாறு வேலைக்காரனுக்குக் கட்டளை யிடப்பட்டது. குண்டுகள் வெடிப்பதாலும், துப்பாக்கிகள் சுடுவதாலும் ஏற்பட்ட புகை மண்டலத்தினிடையே இனிய கானம் முழங்கியபோது ஷேக்ஸ்பியரின் பாக்கெட் பதிப்பு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருப்பார். கடுமையாக குண்டுமாரி பொழியுமாயின், தகரதொப்பியை அணிந்துகொண்டே அவர் குளிப்பார்.

தமது துருப்புக்களிடம் சர்ச்சில் கொண்டிருந்த அன்பை பித்ருவார்சை என்று சொல்லலாம். படை பாதுகாவல் பொறுப்பேற்றிருந்த இளைஞர்கள் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தனதக் கண்டு அவர் கவலைப்பட்டார். மிக உயரமான இடத்தில் நின்றுகொண்டு

அன்பும் அனுதாபமும் கலந்த தொனியில் அவர்கள் தாக்குதலுக்கு இரையாவது சாத்தியமில்லை என்பதை அவர் விளக்குவார். எவராவது காயமடைந்து விட்டால், ஸ்தலத்துக்கு விரைந்து அவரைத் தூக்கிச் செல்லும் பலகையின் பக்கத்திலே இருந்து காயமடைந்தவருக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிக் கொண்டிருப்பார். இவ்வாறு, சோல்ஜர்களிடம் அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்துகொண்டமையால் அவர்களும் அவரை நேசித்தார்கள்.

பிரபல உல்லாசப் பிரயாணிகளுடனும் ராணுவக்கொடி யேந்திச் செல்லும் உத்தியோகஸ்தர்களுடனும் அவர் தாராளமாக, சகஜமாகப் பழகினர். அவரது பெரிய அதிகாரிகளான ஜெனரல்கள்கூட அவருக்குப் பக்கத்தில் மெதுவாக நடந்து சென்றனர்; மாஜிமந்திரியான அவர் மீண்டும் மந்திரியாகலாம், யுத்த மந்திரியாகக்கூட ஆகலாம் என்ற உணர்ச்சி, உள்ளச்சமே அவர்களது இங்கடத்தைக்குக் காரணம்.

ஒரு விருந்துக்குப் பிறகு "சிறிது கேளிக்கை"யை விரும்புகிறீர்களா என தமது விருந்தாளிகளை சர்ச்சில் கேட்டார். அவர்கள் உற்சாகத்துடன் "ஆம்" என்றனர். பிரஞ்சு நடன நங்கைகளுடன் கைகோத்து நடனமாட சந்தர்ப்பம் கிடைக்கும் என அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். ராணுவ அரண்களைப் பார்வையிட அவர்களை அவர் அழைத்துச் சென்றார். "இங்கு தாக்குதலுக்கு இரையாகுவோம் என்ற அபாயம் இருக்கவில்லையா" என பிரபல ஜெனரல் ஒருவர் வினவியபோது, "இது மிகவும் அபாயகரமான போர்" என சர்ச்சில் குறிப்பிட்டார்.

1916-ம் வருடம் மே மாதம், அதாவது போர் முனைக்கு அவர் வந்து சேர்ந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு, பட்டாளத்தைக் கலைத்து அதை ரெஜிமெண்டின் இதர யூனிட்டுகளுடன் இணைத்து விட வேண்டுமென உத்தரவு வந்தது. அதே சமயத்தில், சர்ச்சிலின் பலத்த ஆதரவு பெற்ற கட்டாய ராணுவ சேவைப் பிரச்னை லண்டனில் முடிவாகாம லிருந்தது. பார்லிமெண்டரி பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் நிர்பந்திக்கப் பட்டார். இங்கிலாந்துக்கு திரும்புவதென அவர் முடிவு செய்தார். தாயகத்துக்கு அவர் புறப்பட்ட நாள், அவரது பட்டாளத்தினர் மனக் கஷ்டப்பட்டனர்.

பார்லிமெண்டில் கிளர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு தாயகம் திரும்பியதும் சுயதிருப்தி மனேபாவத்தை ஒழித்துக் கட்டுவதில் அவர் மும்முரம்ாக முனைந்தார். ஸோம் (Somme) சண்டை பற்றி அவர் எழுதிய கட்டுரை பரபரப்பை ஏற்படுத்தியது. நேச தேசத்தவரின் சேதத்தை விட எதிரியின் சேதம் மிக அதிகமானது என்ற

ராணுவ அதிபர்களின் மதிப்பீடு சரியல்ல என்று அவர் எழுதினர். ஜெர்மன், பிரிட்டிஷ் தரப்பில் சேத விவரம் முறையே 1: 2.3 என்ற விகிதத்தில் உள்ளது என்ற அவரது மதிப்பீடு இங்கிலாந்தை பிரமிப் படையச் செய்தது. அவரது கூற்று சரியானதென அப்போது ஒப்புக்கொள்ளப்படா விட்டாலும், யுத்தத்துக்கு பிறகு சேத விகிதத்தைக் கவனமாகப் பரிசீலனை செய்த போது அது 1 : 2.27 என்பது தெரிய வந்தது. பொதுவான விஷயங்களி லிருந்து குறிப் பிட்ட ஒரு விஷயத்தை அனுமானிக்கும் முறை (Deductive Process)யை ராணுவ கணக்கிடுகளில் எவ்வாறு உபயோகிக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுவதில் ராணுவ அதிபர்களுக்கு முன் மாதிரியாக அந்த தஸ்தாவேஜி பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால் அந்த சமயத்திலே சர்ச்சிலின் நிலைமை மோசமாக விருந்தது. இங்கிலேயில் நம்பிக்கை யிழந்த அவர் சித்திரக் கலையில் கவனஞ் செலுத்தினர். கொல்லைப்புற வழியாகக் கலைக்கூடத்துக்குள் அவர் பிரவேசித்தார் என்று சொல்லலாம். சர்ச்சில் அமைத்த கவசகார் பிரிவு அவருக்கு பாராட்டுரை வழங்குவதற்கு விரும்பியது. அவரது படத்தை—இது இப்போது டப்ளின் நகராண்மைக் கழக கலை மண்டபத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது—வரையுமாறு சர் ஜான் லேவரியை பணித்தது. அந்தச் சித்திரக்காரர் படமெழுது வதற்காக உட்கார்ந்திருந்த சர்ச்சில், நிபுணரின் வேலை முன்னேற்றை கூர்ந்து கவனித்து வந்தார். சித்திரக் கலையில் அவருக்கு ஆர்வம் ஏற் பட்டது. உடனே அவர் அத்துறையில் முழு மூச்சுடன், மும்முரமாக ஈடுபட்டார். ஓவியக்காரர்களுக்கு அவசியமான உபகரணங்களையும் அவர் வாங்கிக் கொண்டார். துரிதமாகச் சித்திரங்கள் எழுதினர். சார்லஸ் மாரின்—இது தான் சர்ச்சில் தெரிந்தெடுத்த புனை பெயர்—என்னும் ஓவியக்காரரின் படக்காட்சி பாரிஸில் சீக்கிரம் இடம் பெற்றது.

சர்ச்சிலும் லேவரியும் நெருங்கிய நண்பர்களாக விருந்து, இரு வரும் கூட்டாகச் சேர்ந்து சித்திரங்கள் தீட்டலானர்கள்.

நல்ல கலைஞர்கள் வேலை செய்வதை கவனிக்க வேண்டு மென்பது சர்ச்சிலின் விருப்பமாக விருந்தது. தாம் தீட்டிய சித்திரங்களில் அவர்களின் அறிவுத் திறனைப் பயன்படுத்திக் கொள்ளவும் அவர் தயங்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் பிரான்ஸிலே மூன்று தலை சிறந்த பிரெஞ்சு கலைஞர்கள் அவரைச் சந்தித்தனர். சித்திர மெழுதுவதற்கான பெரிய துணி தம்மிடம் இருப்பதாகத் தெரிவித்து அந்த சித்திரத்தை பூர்த்தி செய்வதில் தமக்கு உதவி செய்யுமாறு அவர்களை அவர் அழைத்தார். பின், ஒவ்வொருவருக்கும் அவரது திறமைக்குத் தகுந்தபடி, ஒருவரை மரங்களை படமாகப் போடவும்

மற்ருெரு வரை ஆகாயத்தைப் படமாக்க தீட்டவும் இன்னொரு வரை நீர் நிலைகளைப் படமாகச் சித்தரிக்கவும் அவர் அனுமதித்தார். படம் பூர்த்தியானதும் அவர்களைக் கையெழுத்திடுமாறு அவர் கேட்டுக் கொண்டார். எதிர் காலத்தில் சர்ச்சிலுக்குப் பணமுடை ஏற்படுமானல் அப்படத்தை விற்பனை செய்து பெரும் திரவியம் திரட்டலாம் என்ற எண்ணத்தோடேயே இவ்வாறு செய்யப்பட்டதாக அவரது நண்பரொருவர் நவில்கிருர்.

சித்திரக் கலையைத் தொழிலாக வைத்திருப்பவர்களுக்குள்ள உண்மையை உரைக்குமிடத்து அவர்களுக்கிருந்ததைவிட அதிக திறமை, தேர்ச்சியை சர்ச்சில் பெற்றிருந்தார். பியாஸ்கோ ஒரு சமயம் பின் வருமாறு கூறினர்: அந்த மனிதர் ஓவியக் கலையையே தொழிலாகக் கொண்டிருந்தால் பெரும் திரவியம் சம்பாதிப்பதில் அவருக்கு எவ்வித கஷ்டமும் இருந்திராது. லண்டனிலுள்ள பிரபல கலைக்கூட டைரக்டரொருவர் கூறுவதாவது: "ஓவியங்கள் அனுமதேயப் பேர் வழியால் தீட்டப்பட்டிருந்தால் ஒவ்வொரு ஓவியமும் நூற்று ஐம்பது கினி பெறுமானது. அவற்றில் சர்ச்சிலின் கையெழுத்து இருந்தால் அவர் கேட்கும் எந்த தொகையும் கொடுக்கலாம்."

எனினும், ஓவியம் தீட்டுதலை அலுப்பைப்போக்கி ஆறுதல் அளிக்கும் சாதனமாக அவர் இன்னும் கருதுகிருர். இதுபற்றி அவரது அபிப்பிராயம் வருமாறு: மாறுதல்தான் பிரதான சாதனம். ஒரு மனிதன் தனது சொக்காயை அடிக்கடி உபயோகிப்பதால் அதன் முழங்கையைக் கிழித்து விடுவதுபோல் மனத்தின் குறிப்பிட்டவொரு பாகத்தை அடிக்கடி உபயோகித்து அலுப்பு ஏற்படுத்துவதால் அதனை ஒரு மனிதன் பழுதாக்கிவிட முடியும். பொழுது போக்குச் சாதனமொன்றையும் உற்சாக மூட்டக்கூடிய இதர முறைகளையும் பக்குவப்படுத்திப் பயன் படுத்திக் கொள்வது பொது சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு மனிதனுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகும்.

சர்ச்சிலின் அடிபடைத் திட்டம் சாலச் சிறந்தது என 1916-ம் வருஷம் பிற்பகுதியில் டார்டனெல்ஸ் சம்பவம் பற்றிய விசாரணை கமிட்டி முடிவு செய்தமையால் மந்திரி சபையில் அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அமெரிக்க துருப்புகளுக்குத் தளவாடமளிப்பதில் பங்கு கொண்டமைக்காக அவருக்கு அமெரிக்க அரசாங்கத்தின் உயர்தர பதக்கத்தை ஜெனரல் பெர்ஷிங் வழங்கினர். இத்தகைய கௌரவம் கிடைக்கப்பெற்ற ஒரே ஆங்கிலேயர் சர்ச்சில்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விஷயம். யுத்தமுடிவில் ஈடு இணையற்ற வகையில் இரு இலாக்காக்களை நிர்வகிக்கும் பொறுப்பை அவர்

ஏற்றிருந்தார். யுத்த இலாக்காவும் விமான இலாக்காவும் அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. யுத்தத்துக்குப் பிறகு பதவியிலிருந்து அகற்றப்பட்டதோடு, 1900-ம் ஆண்டுக்குப் பிறகு முதல் தடவையாக பார்லிமெண்டுக்கும் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

விமான மந்திரி என்ற முறையில், மிக மோசமான விமான மோட்டி என்ற கெட்ட பெயரை அவர் பெற்றார். அடிக்கடி அவர் ஓட்டிய விமானம் கோளாறுக்கு இலக்காகியது. ராணுவக் கலைப் புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பிரான்ஸுக்கு அவர் அடிக்கடி விமானப் பிரயாணம் செய்தார். விமான விபத்தின் விளைவாக ஒடிந்த (வளைந்த) காலுள்ளவரும் விமான மோட்டுவதில் நிபுணருமான காப்டன் ஜாக்ஸ்காட் என்பவர் பெயரளவுக்கு விமானியாக விருந்தாரேயன்றி உண்மையில் விமானத்தை ஓட்டிச் சென்றவர் சர்ச்சில் தான். சர்ச்சில் விமானமோட்டிய ஒவ்வொரு தடவையும் ஏதாவது விபத்து ஏற்படுமென்ற எண்ணத்துடன் எந்த நிலைமையையும் சமாளிப்பதற்கு ஸ்காட் ஆயத்தமாக இருந்து கொண்டிருப்பார்!

1919-ம் வருஷம் கோடை காலத்தில் விமானம் விபத்துக்குள்ளானபோது சர்ச்சிலும் ஸ்காட்டும் வெளியே குதித்து உயிர் தப்பினர். வழக்கம்போல காயமின்றி சர்ச்சில் தப்பினார். ஆனால் ஸ்காட் இரத்தம் ஒழுக ஸ்மரணையின்றிக் கிடந்தார். ஸ்காட்டின் வளைந்த கால் எப்படியோ மடங்கிக் கொண்டது; ஆபரேஷன் செய்ததில் கால்வளைவும் நீங்கி அவர் குணமடைந்தார். ஆஸ்பத்திரியிலிருந்து கால் ஊனம் சிறிதும் இல்லாமல் ஸ்காட் வெளியேறினார். சர்ச்சிலுக்கு அது நல்ல காலமாக இருந்த போதிலும், விமான மோட்டுவதில் சர்ச்சிலுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவரது மனைவியின் தூண்டுதலின் பேரில், விமானமோட்டுவதை விட்டுவிடுவதென அவர் முடிவு செய்தார். (தொடரும்.)

187046

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

ஸீரத்துல் குப்ரு வென்னும்

# கதீஜா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரமானது எஜமானியாக ஏற்று பின்பற்றத் தக்க நாயகியான மஹா சங்கை பொருந்திய நபி பெருமாட்டியின் ஜீவவிருத்தாந்தமாகும். இம்மங்கையர் தமது வடிவாம்சங்களில் உலகப் பெண்கள் எல்லாரினும் மீக்குற்றவர்; அன்றியும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டிகள் எல்லாரினும் பிரதமமானவர் என்ற பெருமை அவருக்கு வாய்ந்திருந்தது. அவரது வாழ்க்கை சம்மந்தமான இந்த சரித்திரம் அனைவரும் படித்து அனுஷ்டிக்கத்தக்கதா யிருக்கிறது.

இதில் கதீஜா நாயகியின் வமிச பரம்பரையும், முதற் கலியாணங்களும் அவர்களின் வர்த்தகச் செல்வமும், றஸூல் நாயகம் (ஸல்) ஷாம், மிஸர் தேசங்களுக்கு யாத்திரை போய் வந்ததும், கதீஜா பெருமாட்டிக்கும் நபிகள் பெருமானுருக்கும் திருக்கலியாணம் முடிந்ததும், கதீஜா பெருமாட்டி தமது உரிமையைக் கணவருக்கு அர்பணஞ் செய்ததும், நபி பெருமானுருக்கு வஹி இறங்குதல், நபிபட்டந் தரித்தல், நபிகள் பெருமானுருக்கு கதீஜா பெருமாட்டியின் உதவி, கதீஜா பெருமாட்டியின் மௌத் முதலியவைகளடங்கி யிருக்கின்றன. இச்சரிதையில் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகள் நிறைந்திருக்கின்றன.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1—4—0

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2—2—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

## தாரீகுல் குலபா

### இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம் மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற்பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது.

கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

ஷை இரண்டாவது பாகம்: இதில் ஹஜரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்றும் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜரத் (அலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜரத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5 கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3—8—0

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

**ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,**

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.